**செய்தி வெளியீடு எண் :2330** **நாள் : 22.12.2022**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், நீர்வளத்துறையின் செயல்பாடுகள் மற்றும் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பல்வேறு திட்டப்பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

---------------------------

இன்று (22.12.2022) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், நீர்வளத்துறையின் செயல்பாடுகள், துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு திட்டப்பணிகளின் முன்னேற்றம் மற்றும் வரும் 2023–2024 நிதியாண்டில், புதியதாக மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ள தடுப்பணைகள், கதவணைகள், அணைக்கட்டுகள், கால்வாய்கள் மற்றும் இதர புனரமைப்பு பணிகள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இக்கூட்டத்தில், நீர்வளத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, இ.ஆ.ப., காவிரி தொழில் நுட்பக்குழு தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியன், நீர்வளத் துறை முதன்மை தலைமைப் பொறியாளர் திரு. கு. இராமமூர்த்தி, சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர் மண்டல தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்பு பொறியாளர்கள் மற்றும் துறை சார்ந்த அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

புதுதில்லியில் 2021 மற்றும் 2022–ஆம் ஆண்டிற்கான உலக பாரம்பரிய நீர்ப்பாசன கட்டமைப்பு விருதுகள், தமிழ்நாட்டிலுள்ள வீராணம் ஏரி, கல்லணை, காலிங்கராயன் அணைக்கட்டு மற்றும் கொள்ளிடம் கீழணை ஆகிய நான்கு பாசன கட்டமைப்புகளுக்கு நீர்–சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் ஆராய்ச்சிக்கான சர்வதேச சங்கம் (International Association for Hydro–Environment Engineering and Research) சார்பில் விருதுகள் வழங்கப்பட்டது. இந்த விருதுகளை மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் அவர்களிடம் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், முதன்மைத் தலைமைப் பொறியாளர் (ம) தலைமைப் பொறியாளர் (பொது), நீர்வளத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர்கள் காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

**********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in